வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 22.8.2024 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று வார்சாவில் போலந்து அதிபர் திரு **டொனால்டு டஸ்க்**குடன் பிரதிநிதிகள் நிலையில் பேச்சு வார்த்தை நடத்தினார்.

மத்தியில், புதிய அரசு அமைந்து 100 நாட்களுக்குள், நாட்டில் 11 லட்சம் பெண்கள் **லட்சாதிபதி சகோதரி**களாக மேம்பட்டுள்ளதாக, மத்திய அமைச்சர் திரு ஷிவ்ராஜ் சிங் சவ்கான் தெரிவித்துள்ளார்.

ஜம்மு-காஷ்மீர் மற்றும் அரியானா சட்டமன்ற தேர்தலுக்கான, தேர்தல் பார்வையாளர்களின் கூட்டத்தை, தேர்தல் ஆணையம், புதுடெல்லியில் இன்று நடத்தியது.

**வக்ஃபு சொத்துக்கள் திருத்த மசோதா** பற்றிய கூட்டு நாடாளுமன்ற குழுவின் முதலாவது கூட்டம், புதுடெல்லியில் இன்று நடைபெற்றது.

மோடி

இந்தியா-போலந்து உறவுகளை, **தந்திரோபாயக்** கூட்டாண்மையாக மேம்படுத்த இரு நாடுகளும் முடிவு செய்துள்ளன. பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று வார்சாவில் போலந்து அதிபர் திரு **டொனால்டு டஸ்க்**குடன் பிரதிநிதிகள் நிலையில் நடத்திய பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து செய்திக் குறிப்பு ஒன்றில் இதை அறிவித்தார். இந்தியாவும்-போலந்தும் நடப்பாண்டில் தூதரக உறவுகளின் 70-ஆம் ஆண்டைக் கொண்டாடுவதை அவர் சுட்டிக்காட்டி, ஜனநாயகம் மற்றும் **சட்டத்தின் ஆட்சி** மீதான பொதுவான நம்பிக்கையே, இந்த உறவுகளுக்கு ஆதாரம் என்றார்.

உக்ரைன் பிரச்சனையின் போது இந்திய மாணவர்களை மீட்பதில் போலந்து வழங்கிய உதவிகளை இந்திய மக்கள் ஒருபோதும் மறக்க முடியாது என்று திரு நரேந்திர மோடி கூறினார். சர்வதேச அரங்கில் இருநாடுகளும் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருவதாகவும், ஐ நா மற்றும் இதர சர்வதேச அமைப்புகளில் சீர்திருத்தம் கொண்டு வருவதை இருநாடுகளுமே ஒப்புக் கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

**இந்தியாவில் தயாரிப்போம்-உலகிற்காக தயாரிப்போம்** திட்டத்தில், போலந்து நிறுவனங்கள் தங்களை இணைத்துக் கொள்ள வேண்டும் என பிரதமர் கேட்டுக் கொண்டார். எந்த ஒரு பிரச்சனைக்கும் போர்க் களத்தில் தீர்வு கிடைக்காது என்பதே, இந்தியாவின் திடமான நம்பிக்கை என்றும், உக்ரைன் மற்றும் மேற்கு ஆசியாவில் தற்போது நிலவும் பிணக்குகளைத்

தீர்க்க, **நட்பு நாடு**களுடன் இணைந்து, இயன்ற எல்லா உதவிகளையும் வழங்க, இந்தியா தயார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வரலாறு, புவியியல் மற்றும் மரபுகளின் அடிப்படையில் இந்தியாவிற்கும்-போலந்திற்கும் இடையே பல வேறுபாடுகள் உண்டு என்றாலும், இருநாடுகளும் **ஒன்றையொன்று** நன்கு புரிந்து கொள்வதாக, போலந்து பிரதமர் திரு டொனால்டு டஸ்க் கூறினார். இந்தியா, ஜனநாயகம் நிறைந்த நாடாக இருப்பதால் தான், உலகமே இந்தியாவைப் போற்றுவதாக அவர் கூறினார்.

முன்னதாக பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு இன்று வார்சாவில் சம்பிரதாய வரவேற்பு அளிக்கப்பட்டது. போலந்து பிரதமரும் இதில் கலந்து கொண்டார்.

இருதரப்பு பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று போலந்து அதிபர் திரு **ஆந்த்ரேஜ் டூடா**-வை சந்திக்கிறார். போலந்து நாட்டின் வர்த்தக தலைவர்களையும் அவர் சந்தித்து கலந்துரையாடுவார்.

இரண்டு நாடுகளுக்கான பயணத்தின் 2-ஆவது கட்டமாக பிரதமர் திரு நரேந்திர மோடி, நாளை, போலந்தில் இருந்து, உக்ரைன் செல்ல இருக்கிறார். உக்ரைனில், இருதரப்பு உறவுகளின் பல்வேறு அம்சங்கள் பற்றிய நிகழ்ச்சிகளில் அவர் கலந்து கொள்கிறார். மாணவர்கள் உட்பட, உக்ரைனில் உள்ள இந்திய சமூகத்தினரையும் அவர் சந்திக்க இருக்கிறார்.

*லாக்பதி*

மத்தியில், புதிய அரசு அமைந்து 100 நாட்களுக்குள், நாட்டில் 11 லட்சம் பெண்கள் **லட்சாதிபதி சகோதரி**களாக மேம்பட்டுள்ளதாக, மத்திய ஊரக வளர்ச்சி மற்றும் வேளாண் துறை அமைச்சர் திரு ஷிவ்ராஜ் சிங் சவ்கான் கூறி உள்ளார். இதில் சுமார் 1 லட்சம் **லாக்பதி தீதி**க்களுக்கு, மகாராஷ்டிர மாநிலம் ஜல்காமில் வரும் 25-ஆம் தேதி நடைபெற உள்ள விழாவில், பிரதமர் திரு நரேந்திர மோடி சான்றிதழ் வழங்க இருப்பதாக, அமைச்சர் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த சுமார் 1 கோடியே 50 லட்சம் பெண்கள், மெய்நிகர் முறையில், இவ்விழாவில் தங்களை இணைத்துக் கொள்வார்கள் என்றும், அவர் கூறினார்.

மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான 2 ஆயிரத்து 500 கோடி ரூபாய் நிதி, மற்றும், 5 ஆயிரம் கோடி ரூபாய் கடன் உதவிகளையும், பிரதமர் இந்நிகழ்ச்சியின் போது விடுவிக்க இருப்பதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

*சவ்கான்*

உணவு, ஊட்டச்சத்து, சுகாதாரம், மற்றும், வீட்டுக் கழிவு மேலாண்மை தொடர்பான, FNHW செயல்பாடுகளில் பெண்களின் கூட்டுப் பங்கேற்பு குறித்த, சங்கதன் ஸ்வாஸ்த்ய சம்ரித்தி-தேசிய மாநாட்டை, இன்று

புதுடெல்லியில் மத்திய ஊரக வளர்ச்சி மற்றும் வேளாண் துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவ்கான் தொடக்கி வைத்தார். உணவு மற்றும் ஊட்டச்சத்தில் முக்கிய கவனம் செலுத்தாமல், வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்க இயலாது என்றும் இதில் பெண்களின் பங்கு முக்கியமானது என்றும் அவர் கூறினார். மத்திய ஊரக வளர்ச்சி துறை இணை அமைச்சர் டாக்டர் சந்திரசேகர் பெம்மசானி, இந்நிகழ்ச்சியில் பேசுகையில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் நாட்டின் வளர்ச்சிக்கான முதுகெலும்பாகவே திகழ்வதாக கூறினார். கள அளவில் அடிப்படை ஆரோக்கிய வசதிகளை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை, நிதி ஆயோக் உறுப்பினர் டாக்டர் விகே பால், தமது உரையில் வலியுறுத்தினார். மனிதவளம் ஆரோக்கியமாக இருந்தால் நாடு தானாகவே முன்னேறும் என்று அவர் குறிப்பிட்டார். நாடு முழுவதிலும் இருந்து மகளிர் சுயஉதவிக் குழுவினர் உட்பட ஏராளமான பெண்கள் இம்மாநாட்டில் பங்கேற்றுள்ளனர்.

விருது

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, புதுடெல்லி குடியரசுத் தலைவர் மாளிகையில் இன்று நடைபெற்ற விழாவில், 2024-ஆம் ஆண்டிற்கான **விக்யான் புரஸ்கார் விருது**களை, புகழ்பெற்ற விஞ்ஞானிகளுக்கு, வழங்கிச் சிறப்பித்தார். நடப்பாண்டிற்கான **விக்யான் ரத்னா** விருது, பேராசிரியர் **கோவிந்தராஜன் பத்மநாப**னுக்கு வழங்கப்பட்டது. டாக்டர் **அனந்த ராமகிருஷ்ணன்**, வேளாண் அறிவியல் துறையில் **விக்யான் ஸ்ரீ** விருது

பெற்றார். அணுசக்தி துறைக்கான விக்யான் ஸ்ரீ விருது, மும்பை **பாபா அணு ஆராய்ச்சி மையத்**தைச் சேர்ந்த டாக்டர் ஏ கே **தியாகி**க்கு, வழங்கப்பட்டது. புனேயில் உள்ள, **இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சிக் கழகத்**தைச் சேர்ந்த பேராசிரியர் ஜெயந்த் **உத்காவோங்கர்**, உயிரியல் துறைக்கான **விக்யான் ஸ்ரீ** விருது பெற்றார்.

தேர்தல்-ஆணையம்

ஜம்மு-காஷ்மீர் மற்றும் அரியானா சட்டமன்ற தேர்தலுக்கான பொதுப் பார்வையாளர்கள், போலீஸ் பார்வையாளர்கள் மற்றும் செலவினப் பார்வையாளர்களின் கூட்டம் புதுடெல்லியில் இன்று நடைபெற்றது. தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ்குமார், இக்கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில், முற்றிலும் களத்தில் இருந்து செயல்படுமாறு தேர்தல் பார்வையாளர்களை ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளதாக தெரிவித்தார். ஜம்மு-காஷ்மீர் மற்றும் அரியானா சட்டமன்ற தேர்தல்கள், பாரபட்சமற்ற முறையில் நியாயமான விதத்தில் நடைபெறும் என்று அவர் கூறினார். ஜம்மு-காஷ்மீரில் சட்டமன்ற தேர்தல் குறித்து மக்களிடையே மிகுந்த உற்சாகம் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வக்ஃபு

வக்ஃபு சொத்துக்கள் குறித்த திருத்த மசோதா பற்றிய கூட்டு நாடாளுமன்ற குழுவின் முதலாவது கூட்டம், புதுடெல்லியில் இன்று நடைபெற்றது. குழுவின் தலைவரும் பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினருமான திரு

ஜெகதம்பிகா பால் தலைமையிலான இக்குழுவில், 21 மக்களவை எம்பிக்களும், 10 மாநிலங்களவை எம்பிக்களும் உறுப்பினர்களாக இடம் பெற்றுள்ளனர். புதிய மசோதா மீதான விவாதங்களின் போது, சிறுபான்மை அமைப்புகளைச் சேர்ந்த அதிக பட்ச மக்ளுக்கு அதிக பட்ச வாய்ப்புகள் வழங்கப்படும் என்று, இன்றைய கூட்டத்திற்கு முன்பாக செய்தியாளர்களிடம் பேசுகையில் திரு ஜெகதம்பிகா பால் கூறினார். வக்ஃபு சொத்துக்கள், முஸ்லீம் சமுதாயத்தின் பின்தங்கிய சமூகத்தினர் மற்றும் பெண்களுக்கு பயன்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் அரசு இம்மசோதாவை கொண்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

ஆப்பிரிக்கா

அரிசி போன்ற அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதன் மூலம், ஆப்பிரிக்காவில் போதிய அளவில் உணவு தானியங்கள் கிடைப்பதை இந்தியா உறுதிப்படுத்தும் என்று, மத்திய **வர்த்தக துறை செயலர்** திரு **சுனில் பர்த்வால்** கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில், **சிஐஐ இந்தியா-ஆப்பிரிக்கா வர்த்தக மாநாட்**டின் நிறைவு விழாவில் உரையாற்றிய அவர், ஆப்பிரிக்க மருத்துவத் துறையின் முன்னேற்றத்தில் இந்திய மருந்து உற்பத்தி நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிப்பதாக கூறினார். இந்தியாவின் தொலைநிலை மருத்துவ சேவைகள், ஆப்பிரிக்கா உட்பட உலகின் பல்வேறு நாடுகளுக்கு உதவ முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வெளியுறவு அமைச்சகத்தின் பொருளாதார விவகாரங்கள் பிரிவுச் செயலர் திரு **தம்மு ரவி**, இந்நிகழ்ச்சியில் பேசுகையில், ஆப்பிரிக்காவில், சாலை, ரயில்வே, மின்உற்பத்தி உள்ளிட்ட பல்வேறு உள்கட்டமைப்பு திட்டங்களில், இந்திய நிறுவனங்கள் முக்கிய பங்கேற்று வருவதாக கூறினார். இருநாடுகளின் பரஸ்பர வளர்ச்சிக்கான கூட்டு முயற்சிகளுக்கு ஏதுவாக அரசு-தனியார் ஒத்துழைப்பு திட்டங்களை ஊக்குவித்தல் அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார். **புருண்டி** துணை அதிபர் திரு **பிராஸ்பர் பாசோ-பன்சா**, **லைபீரியா** துணை அதிபர் திரு **ஜெரமியா கூங்**, **ஜிம்பாப்வே** துணை அதிபர் டாக்டர் **சிவேங்கா** உள்ளிட்ட ஆப்பிரிக்க தலைவர்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

*சோனோவால்*

மத்திய கப்பல் மற்றும் துறைமுகத் துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால், நவி மும்பையில், ஜவஹர்லால் நேரு துறைமுகம் அமைந்துள்ள பகுதியில் பல்வேறு புத்தாக்கப் பணிகள் மற்றும் அழகூட்டும் திட்டங்களைத் தொடக்கி வைத்தார். துறைமுகத்தின் உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டங்களையும் அவர் மறுஆய்வு செய்தார். சம்பந்தப்பட்ட பகுதியில் சுற்றுச்சூழல் சமநிலையை மேம்படுத்தும் வகையிலான 3 நீர் நிலைகளை, அமைச்சர் தொடக்கி வைத்தார். கடற்கரையில் இருந்து கப்பல்களுக்கு மின்சாரம் வழங்க, Gateway Terminal நிறுவனத்திற்கும்,

ஜவஹர்லால் நேரு துறைமுகத்திற்கும் இடையே, அமைச்சர் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று.

*விஜய்*

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் நடிகர் விஜய், கட்சிக் கொடியை சென்னையில் இன்று அறிமுகப்படுத்தினார். தமது அரசியல் பயணம் இன்று முதல் தொடங்குவதாகவும், ஜாதி-மதத்தின் பெயரிலான பாகுபாடுகளை களைய பாடுபடப் போவதாகவும் அவர் கூறினார். கட்சித் தொண்டர்களுடன் இணைந்து கட்சி அலுவலகத்தில் அவர் இதுகுறித்து உறுதி மொழியேற்றார். விடுதலைப் போராட்ட வீரர்களின் பங்கு பணிகளை உறுதி மொழியில் அவர் நினைவு கூர்ந்து அனைத்து மக்களுக்கும் சம உரிமை மற்றும் சம வாய்ப்பு வழங்குவதே கட்சியின் குறிக்கோள் என்றார். தமிழக வெற்றிக் கழகத்தின் முதலாவது மாநாடு வரும் செப்டம்பர் மாதம் விக்ரவாண்டியில் நடைபெறும் என்று நடிகர் விஜய் மேலும் தெரிவித்தார்.

*டாக்டர்-கொலை*

கொல்கத்தா **ஆர்ஜி கர்** மருத்துவமனையில் பெண் டாக்டர் கொலை செய்யப்பட்டது பற்றிய வழக்கில் விசாரணைகளின் நடப்பு நிலை குறித்து, சிபிஐ-யும், கொல்கத்தா காவல் துறையும் இன்று உச்சநீதிமன்றத்தில் தத்தம் அறிக்கைகளை தாக்கல் செய்தன. உச்சநீதிமன்றம் தானாகவே முன் வந்து பதிவு செய்துள்ள இந்த வழக்கில், தலைமை நீதிபதி திரு சந்திர சூட் தலைமையிலான அமர்வு இன்று விசாரணைகளை மீண்டும் தொடக்கிய

போது போராட்டத்தில் ஈடுபட்டுள்ள டாக்டர்கள் பணிக்கு திரும்ப வேண்டும் என தலைமை நீதிபதி கேட்டுக் கொண்டார். இந்த வழக்கில் தலையீட்டாளர்களாக தங்களையும் சேர்த்துக் கொள்ளக் கோரி, பல்வேறு மருத்துவ நிபுணர்கள் மற்றும் மருத்துவ அமைப்புகளும், நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளனர். மருத்துவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த கடுமையான சட்டங்கள் தேவை என்று நாடு முழுவதும் மருத்துவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். நீதிமன்றம் இந்த வழக்கு பற்றிய முந்தைய விசாரணைகளின் போது, மருத்துவர்களின் பாதுகாப்பு குறித்த பிரச்சனைகளை ஆராய பணிக்குழு அமைப்பது உட்பட பல்வேறு உத்தரவுகளை வெளியிட்டது.

*நீரஜ்*

2 முறை ஒலிம்பிக் பதக்கம் வென்றுள்ள இந்திய ஈட்டி எறிதல் வீரர் நீரஜ் சோப்ரா, இன்று இரவு சுவிட்சர்லாந்தில், புகழ்பெற்ற லுசான் டைமண்ட் லீக் போட்டிகளில் பங்கேற்கிறார். காயம் காரணமாக அவர் இந்த போட்டியில் பங்கேற்க இயலாது என கருதப்பட்ட நிலையில் அதையும் மீறி அவர் இந்த போட்டியில் கலந்து கொள்கிறார். பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளில் நீரஜ் வெள்ளிப் பதக்கம் வென்ற போது அவருடன் வெண்கலப் பதக்கம் வென்ற ஆண்டர்சன் பீட்டர்ஸ், டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் வெள்ளிப் பதக்கம் வென்ற யாகூப் வாத்லேய்ச் ஆகியோரும் லுசான் டைமண்ட் லீக் போட்டிகளில் பங்கேற்க உள்ளனர்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று வார்சாவில் போலந்து அதிபர் திரு **டொனால்டு டஸ்க்**குடன் பிரதிநிதிகள் நிலையில் பேச்சு வார்த்தை நடத்தினார்.

மத்தியில், புதிய அரசு அமைந்து 100 நாட்களுக்குள், நாட்டில் 11 லட்சம் பெண்கள் **லட்சாதிபதி சகோதரி**களாக மேம்பட்டுள்ளதாக, மத்திய அமைச்சர் திரு ஷிவ்ராஜ் சிங் சவ்கான் தெரிவித்துள்ளார்.

ஜம்மு-காஷ்மீர் மற்றும் அரியானா சட்டமன்ற தேர்தலுக்கான, தேர்தல் பார்வையாளர்களின் கூட்டத்தை, தேர்தல் ஆணையம், புதுடெல்லியில் இன்று நடத்தியது.

**வக்ஃபு சொத்துக்கள் திருத்த மசோதா** பற்றிய கூட்டு நாடாளுமன்ற குழுவின் முதலாவது கூட்டம், புதுடெல்லியில் இன்று நடைபெற்றது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 22.8.2024/Script/

------------------------------